கிடைக்கக் கூடிய பகுதிக்குச் சற்று தொலைவிலே சிப்காட் நிறுவனம் இருப்பதால், நிச்சயமாக ஒரு காகித தொழிற்சாலையை எங்கள் தொகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லி, நவோதயா—புதிய கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்தத் திட்டத்தை மற்ற எல்லா மாநிலங்களும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது, ஆனால், தமிழகம் அதைப் புறக்கணித்து வருகிறது.

பெற்ற தந்தை தன் மகனை விருப்பப்பட்டு படிக்க வைத்தாலும் அதை தடை செய்ய என்ன காரணம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. கர்நாடகமும் அரசு தான், ஆந்திரமும் அரசுதான். அங்கே கிளர்ந்து இருக்கிற உணர்வு தமிழ் மண்ணிலே பிறந்து இருக்கிற நமக்கும் இருக்கிறது, எனக்கும் இருக்கிறது. ஆனாலும், ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதிலே நமக்கு என்ன தயக்கம்? இந்தியிலே நடிக்கச் செல்லுகிற ஸ்ரீதேவியை உங்களால் தடுத்து நிறுத்த முடிகிறதா? அல்லது ரஜினிகாந்த், கமலஹாசன் இந்தியிலே போய் நடிக்கிறார்கள் என்று சொன்னால் அப்படி நடிப்பதை தடை செய்ய முடிகிறதா? அப்படி தடுக்கக்கூடிய போராட்டக்காரர்கள் இருக்கிறார்களா என்று பார்க்கும்போது இல்லாத சூழ்நிலையை நான் மெத்தப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட பேச்சுக்களினாலே ஒரு கல்வியை, ஒரு மொழியை கற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தை நீங்கள் தடுத்து நிறுத்தலாமா? இன்றைய தினம் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் புதிய எண்ணத்தோடு இந்தக் கல்விக் கொள்கையை தருகிறார்கள் என்று சொன்னால், அனைத்து மக்களும் அந்தக் கல்வியை பெறுவதற்கு, அதை தமிழகத்தில் கொண்டு வருவதற்கு, நீங்கள் துணையாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு வேண்டாம் என்று சொல்லவேண்டாம் என்று நான் எங்களுடைய இந்திய தேசிய காங்கிரசின் சார்பிலே மெத்த பணிவோடு சொல்லி, இந்த வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

5. விதி 110-ன் கீழ் சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் அறிக்கை.

மின் உற்பத்தி கட்டுப்பாடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110-இன் கீழ் பேரவைக்கு மின் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.*

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : நெய்வேலி மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட மின் தடை காரணமாக இன்று காலை 6-31-க்கு நெய்வேலி அனல் மின்நிலையம் தமிழ் நாடு மின் இணைப்பில் இருந்து பிரிந்தது. உடனே கல்பாக்கம்

1987 மார்ச் 4] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

அணுமின்நிலையமும் பிரிந்தது. இதனால் மின் உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டு மின் அழுத்தமும் பிரிக்-கென்சியும் வெகுவாக குறைந்தன. இதனால் சென்னை மின் இணைப்பிலிருந்து பிரிக்கப்பட்டது. பிறகு ஒவ்வொரு பகுதியாக இணைத்து 7.35-க்கு எல்லா மின் இணைப்புகளும் ஒன்று சேர்க்கப்பட்டன. நெய்வேலி அனல் மின் நிலையம் இணைப்பில் உள்ளது. ஆனால் கல்பாக்கம் அணு மின் நிலையம் வழங்கும் மின்சாரம் நாளைதான் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது 360 மெகாவாட் கல்பாக்கம் உற்பத்தி தடைப்பட்டுள்ளது. இதனாலேயே குறைந்த மின் அழுத்தம் ஏற்பட்டது. மின் இணைப்பின் பல இடங்களில் மின்சாரம் தாற்காலிக தடை ஏற்பட்டு இருக்கிறது. மாலை 4 மணி அளவில் ஒருவித சீரமைப்பு ஏற்படுத்த சகல நடவடிக்கைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

1–3–87 முதல் 30–6–87 முடிய தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி, கட்டுப்பாடு பற்றிய விவரமும் விளக்கமும்.

கடந்த ஆண்டு நிலவிய நீர் வரத்தினை கணக்கில்கொண்டு தற்சமயம் புனல் மின் நிலையங்களின் நீர் தேக்கங்களில் உள்ள நீரின் இருப்பு, தற்போது உள்ள பேணுதற் பணிகளை கருத்தில் கொண்டு அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தி அளவு, கடந்த ஆண்டு கிடைத்த அளவின் அடிப்படையில் நெய்வேலி முதல் அனல் மின் நிலையத்தில் இருந்து கிடைக்கக்கூடிய மின் சக்தியின் அளவு மற்றும் நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தில் இருந்தும், கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் இருந்தும், மேற்படி நிறுவனத்தினரின் கணிப்புப்படி நமக்கு சேர வேண்டிய மின் சக்தியின் அளவு இவற்றை கருத்தில் கொண்டு 1—3—1987 முதல் 30—6—1987 முடிய உள்ள காலத்திற்கான தமிழ் நாட்டின் மின்சார உற்பத்தி நிலைமை ஆய்வு செய்யப்பட்டது.

இப்பற்றாக்குறையினை தற்போது அமலில் உள்ள 40 விழுக்காடு மின் வெட்டுடன் சமாளிக்க இயலும். இவ்வெட்டு உயர் மின் அழுத்த சக்தி பெறும் தொழிற்சாலைகளுக்கு மாத்திரம் தான் பொருந்தும். விவசாயம், வீட்டு இணைப்புகளுக்கு எந்த வித மின் கட்டுப்பாடும் இல்லை. இனியும் வராது. இந்நிலைமை 1987 ஆம் ஆண்டு ஜூன் திங்கள், தென் மேற்கு பருவ மழை தொடங்கும் வரை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.